முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 623 /2020

தேதி : 21.10.2024

(வா.சா.2) – திருமதி.தமிழரசி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1, 2 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1, 2 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

நிரூபண வாக்குமூலத்திற்கு நான் தான் தகவல் சொன்னேன் என்றால் ஆமாம். நாகாத்தாள் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் வீட்டின் தெற்குபுரம் என்னுடைய வீடு இருப்பதாக உள்ளது என்று சொல்லியிருக்கிறேன் என்றும் அதற்குண்டான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் நாகாத்தாள் வீட்டின் அருகில் வசிக்கவில்லை என்றால் 4 வீடு தள்ளி வசிக்கிறேன். ஆனால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. வாதி சுமார் 10 ஆண்டுகளாக பழக்கமா என்றால் 20 ஆண்டுகள் பழக்கம். வாதிக்கு வழக்கு சொத்து பாத்தியமா, இல்லையா என்று நான் ஆவணங்களை பார்க்கவில்லை என்றால் ஆமாம். வழக்கு சொத்தை 1–ஆம் பிரதிவாதி 2000–ஆம் ஆண்டில் கிரையம் வாங்கிய விபரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். அவர் கிரையம் வாங்கிய சொத்தை 2–ஆம் பிரதிவாதிக்கு 2002–இல் பவர் கொடுக்கப்பட்டு அது அவர் மேற்பார்வையில் உள்ளது என்றால் தெரியாது.

வழக்கு சொத்தின் பிளாட் எண் மற்றும் நான்குமால் விபரத்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் ஆமாம். 1–ஆம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்து போலியான முறையில் துர்க்கையம்மாள் கிரையம் வாங்கி வருவாய் ஆவணங்களில் மாற்றம் செய்து அது ரத்து செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியது என்றால் ஆமாம். வாதி வகையறா ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்த வழக்கை பற்றியோ, வாதி பெயரிலுள்ள பட்டாவை ரத்து செய்தது பற்றியோ தெரியாது என்றால் ஆமாம். வழக்கு சொத்தை வாதி ஒருகாலும் அனுபவிக்கவில்லை என்றும், வாதிக்காக உண்மைக்கு மாறாக சாட்சி

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவர்தான் அனுபவிக்கிறார். நான் சொல்வது தவறு என்றும், 1–ஆம் பிரதிவாதி கிரையம் வாங்கி 2–ஆம் பிரதிவாதி மேற்பார்வையில் உள்ளது என்றால் சரியல்ல.

**Sd/.K.Renugadevi**
**Principal Sub Judge,**
Palani.